
# சிறுவர்

# அமுதம்

19.01.98

எண்ணம் .9 கிண்ணம்.1



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

Kinder literarisches Magazin

"தேடு கல்வியில்லாதோர் ஊரைத்
தீயினுக்கிரையாக மடுத்தல்"
-சுப்பிரமணிய பாரதி-

அன்புச் சிறுவர் சிறுமியரே!

1998ஆம் ஆண்டைத் தொட்டு விட்டான் மனிதன். ஆனால் மனிதன் மனிதனாக வாழ்கின்றானா?. நிலவைத் தொட்டான். கிரகங்களையும் ஆராயத் தொடங்கி விட்டான். மனிதனாக வாழ மட்டும் மனிதனுக்குத் தெரியவில்லை. என்ன! மனிதனாகத் தான் வாழ்கின்றான். விதம் விதமாய் உண்கின்றான். விதம் விதமாய் உடுத்துகின்றான். கொண்டாட்டங்கள் களியாட்டங்கள் நடத்துகின்றான். எத்தனை எத்தனையோ கண்டு பிடிப்புக்கள், விளையாட்டு, விஞ்ஞானம் என்று எத்தனை! எத்தனை. இதை விட மனிதன் சாதிக்க என்ன இருக்கிறது என்று தானே நினைக்கிறீர்கள்.

கண்டு பிடிப்புக்கள் வெற்றிகரமானவை தான். ஆனால் தனி மனிதனில் இருந்து கிராமத்துக்குக் கிராமம், நகரத்துக்கு நகரம், நாட்டுக்கு நாடு, மதத்துக்கு மதம், மனிதன் வேறுபட்டு நின்கின்றானே! வேறு பட்டிருந்தாலும் பரவாயில்லை. சண்டை போட்டுக் கொள்கின்றானே! இதை விடவும் வல்லரசுகளின் சண்டைகள் வேறு.

இவைகள் மனித முன்னேற்றத்தையா குறிக்கின்றது.

மனிதன் மனிதனாக, மனித நேயம் உள்ளவனாக வளர வேண்டும். மதம், சாதி, பெண்ணடிமை, சீதனம், என அடித்துக் கொண்டு வாழ்கின்றானே! இதுவா, மனித நேயம். வளரும் சந்ததியினராகிய நீங்கள் விடை காண வேண்டும். விடை காணாவிட்டால் சாதி, சமயம் இனம், மொழி, எல்லாமே ஒன்றையொன்று பிடித்துத் தின்று விடும். இளம் சமுதாயத்தினர் விழித்தெழ வேண்டும். உலகம் சமநிலை பெற வேண்டும். உயர்வு தாழ்வற்ற நிலையில் மனித சமுதாயம் வளர வேண்டும்.

இந்த ஆண்டாவது புதியவர்கள் ஆவோமே!

நம்பிக்கையுடன்,
ஆசிரியை-

அன்பான வாசகர்களுக்கு, புது வருட வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். அதே வேளையில் கணனியின் பிழையாலும், புதிய கணனியின் வரவாலும் சஞ்சிகை தாமதமானதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றோம். சென்ற

ஆண்டினைப் போல இம்முறையும் சந்தாப் பணத்தை அனுப்பும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம். ஒரு ஆண்டுக்கான சந்தா 40 டி.எம்

சந்தாதாரருக்காக காசோலை அனுப்ப வேண்டிய முகவரி:

Konto:1146023746
Siruvar amutham
Kreissparkasse Köln
50189 Elsdorf

துணிச்சலான நடவடிக்கையால் நீங்கள் எதையும் இழக்கப் போவதில்லை. ஏனென்றால், ஏதோ ஒரு சிறப்பான காரியத்தைச் செய்யவே துணிச்சல் என்ற ஆயுதத்தை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். எனவே துணிச்சலை உங்கள் மூலதனமாக்குங்கள்

ரோபேட் ஹுல்லர்-



# நாரையைப் போல்

நெட்டையான கழுத்தை மேலே
நிமிர்த்தி நிற்கும் நாரையே!
குட்டை யோரம் யாரைத் தேடிக்
குறுகுறுப்பாய்ப் பார்க்கிறாய்?

எத்தனையோ மீனைப் பார்த்தும்
ஏனோ தயக்கம் நாரையே!
கொத்து மீனில் கொல்வதற்குக்
குண்டு மீன் தான் இல்லையோ?

ஓடும் மீன்கள் ஆயிரத்தில்
ஒருமீன் வரவா பார்க்கிறாய்!
நாடும் மீனைப் பார்க்கும் வரைக்கும்
நகராமல் நீ நிற்கிறாய்!

தேடும் மீனைப் பார்த்த உடனே
தப்ப விடாமல் பிடிக்கின்றாய்!
ஓடி உழைக்கும் மனிதர் யாரும்
உன்போல் முயன்றால் உயரலாம்.!

-செல்ல கணபதி-

# சத்திரம்



நாகையன் கிராமத்தில் இருக்கும் சிறு வியாபாரி. ஒரு தடவை அவன் நகரத்துக்கு வர வேண்டி இருந்தது. கிராமத்தில் வாழ்ந்த நாகையனுக்கு நகரத்தைப் பார்க்க வியப்பாக இருந்தது. பெரிய மாடிக் கட்டிடங்களும், பெரிய கடைகள், தெருக்கள், நகரத்து மக்கள் எல்லோரையும் பார்க்க, அவனுக்கு வியப்பாக இருந்தது. உணவு விடுதி ஒன்றில் சாப்பாட்டை முடித்துக் கொண்டான்.

இரவு வந்தது. கிராமத்தில் புதிதாக வருபவர்கள் உறவினர் வீடுகளில் தங்குவார்கள். உறவினர்கள் இல்லாதவர்கள் கிராமத்துச் சத்திரத்தில் தங்குவார்கள். அப்படி நகரத்திலும் இருக்கும் என்ற நினைவில் நாகையன் சத்திரத்தைத் தேடினான். தூக்கமும் கண்ணைச் சுழற்றியது. நீண்ட பெரிய மதிலொன்றைக் கண்டான். அதன் அருகிலேயே அவன் நடந்து

கொண்டிருந்தான். பெரிய வாசல் ஒன்றின் மூலமாக உள்ளே நுழைந்தான்.

"பெரிய சத்திரமாக இருக்க வேண்டும். கிராமம் என்றால் வெளியிடத்திலேயே இருக்கும். நகரமானபடியால், மதில் கட்டி அடைத்து வைத்திருக்கிறார்கள்." என்று எண்ணிக் கொண்டான். ஓரிடத்தில் தலைக்குக் கை வைத்துக் கொண்டு உறங்கியும் விட்டான். "யாரது? அரண்மனைக்குள் தூங்குவது?" என்று அதட்டும் குரல் கேட்டு நாகையன் கண்ணைத் திறந்தான். சேவகர்கள் இருவர் ஈட்டியுடன் நிற்பதைக் கண்டு எழுந்து கொண்டான்.

அவர்களிடம் தான் வழிப்போக்கன் என்றும், தூங்குவதற்கு சத்திரம் தேடியபோது அரண்மனையின் மண்டபத்தைச் சத்திரமாக நினைத்துத் தூங்கி விட்டதாகவும் கூறினான். அவர்கள் நம்பவில்லை. அடுத்த நாள் அரண்மனையை அவமதித்த குற்றத்துக்காக அரசன் முன் கொண்டு வரப்பட்டான். அரசனிடமும் தான் சத்திரமென்று நினைத்துத் தூங்கியதாகவே வாதாடினான்.

"அரண்மனை உனக்குச் சத்திரத்தைப் போலத் தெரிகின்றதா?" என்று கோபத்துடன் கேட்டான் அரசன். அதற்கு நாகையன் "ஒரு வகையில் உண்மைதான் அரசே, அரண்மனையும் சத்திரம் தான். உங்கள் பாட்டன், பின்பு உங்கள் தந்தை, இப்போது நீங்கள், இனி உங்கள் மகன். யாராவது நிரந்தரமாகத் தங்கியிருக்கிறீர்களா? சில காலத்துக்கு வாழும் இடம் சத்திரம் தானே!" என்றான்.

அரசனுக்கும் நாகையன் சொன்னதில் உண்மை இருப்பது தெரிந்தது. நாகையனை விடுதலை செய்து விட்டான்.

# இதோ! நொடிகள்

1. கொண்டையிட்ட குமரி வயிற்றில் கோடிகோடி மணிகள். அது என்ன?

2. கயிற்றினால் கட்டித் தரையிலே எறிந்தால் தலையாட்டிச் சுற்றுவான். அவன் யார்?

3. கறுப்பும் வெளுப்புமாய் வரிசைப் பற்கள், கடிக்க உதவாது. பாட உதவும். அது என்ன?

4. ஆறடி மனிதன் வாழ்வை அரையடி நிலத்தில் உள்ள அதிசயக் கோடு சொல்லும். அது என்ன?

5. விண்ணில் ஆடிக் கண்ணைப் பறிப்பாள். அவள் யார்?

6. வெட்டுவார் வளரும். கடிப்பார் தளராது. அது என்ன?

7. புழுவாய் ஊர்ந்தால் விலகி ஓடுவார். பறந்து வந்தால் பார்த்து மகிழுவார். அது என்ன?

8. பல்லழகி என்னைப் பாரிலே யாவரும் தலையிலே வைத்துக் கொண்டாடுவார். நான் யார்?

9. குள்ள அக்கா குளத்துக்குப் போனாள். மீனைத் தின்று கொழுத்துப் போனாள். அவள் யார்?

10. உதைத்தால் உருளும், ஊரைச் சுற்றும், ஏறியிருந்தால் கூட்டிப் போகும். அது என்ன?

-கிரிசாந் மனோரஞ்சிதராஜா-

## சொற்களைக் கண்டு பிடியுங்களள் முடிவு:

| | | |
|---|---|---|
| **இட-** | புவி | சுமங்கலி |
| **வலம்:** | நம் | தயிர் |
| கொவ்வை | சம்பவம் | களி |
| வைகை | அப்பா | சாதி |
| வளை | | பரி |
| கைவளை | **வல-** | பரிதி |
| சபலம் | **இடம்:** | புரதம் |
| பலம் | பசளை | ரதம் |
| சேவி | சளை | பரஸ்பரம் |
| விபச்சாரி | வகை | பரம் |
| சாரி | புரி | |
| வஞ்சனை | தலை | **கீ-மே** |
| சுருதி | ரதி | சந்தனம் |
| தடி | திரு | தவலை |
| தடிமன் | சுனை | தூண் |
| மன் | மடி | பழமை |
| மன்மதன் | கடு | சேவை |
| மதன் | குதி | கயல் |
| தன் | கவி | வில்லி |
| மையல் | புள் | கள் |
| கர்வம் | | கள்ளர் |
| வம்பு | **மே-கீழ்** | மது |
| புஸ் | கொலை | துதி |
| படு | வதனம் | திரவம் |
| கலி | தனம் | அங்குலம் |
| தண் | பண் | குலம் |
| தண்ணீர் | வினை | குதி |
| குடி | கைவினை | நடி |
| தூள் | பசு | நடிப்பு |
| | | பஞ்சம் |

மை,வை,தை,கை,பா,தூ போன்றவை ஓரெழுத்துச் சொற்கள்

தனம், மன், கலி இரண்டு தரம் வந்தன.

1. முகுந்தன் மகேந்திரன் Berg.gladbach
2. ஜெயானந்தன் கண்ணன் Berg.gladbach
3. ஜெயதீபா இரத்தினசபாபதி Eschelbronn
4. மோகன் இரத்தினசபாபதி Eschelbronn
5. ஜெயமாலா இரத்தினசபாபதிEschelbronn
6. கிரிசாந் மனோரஞ்சிதராஜா Münster
7. ஜெயசாந் மனோரஞ்சிதராஜா Münster
8. கபிலன் பரமசிவம் Düseldorf
9. சிந்துஜா இரவீந்திரராஜா Solingen

⌖ 10.தீபா இரவிக்குமார் Denmark

11.நளினி பாலகிருஷ்ணன் Denmark

12.விஜிதா விநாயகமூர்த்தி Denmark

⌖ இந்த அடையாளமிடப்பட்டவர் இந்த முறைக்கான பரிசைப் பெறுகின்றார். இவருக்கு "வ.உ. சிதம்பரனாரின் வரலாறு" பரிசாகக் கிடைக்கிறது.

++++++++++++++++++++++++++++++++++++++++

நல்ல புத்தகங்களைப் படிப்பது சென்ற நூற்றாண்டுகளில் வாழ்ந்த மிகச் சிறந்த அறிவாளிகளுடன் பேசுவதற்கு நிகராகும்.

-டெஸ்கார்டிஸ்-

++++++++++++++++++++++++++++++++++++++++

# உழைப்பும் நிலமும்



(இந்தக் கதைரஷ்ய ஞானியான "லியோ டால்ஸ்டாய்" என்பவரால் எழுதப்பட்டது. முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்த இவர், தன் கொள்கைகளின் மாறுபாடு காரணமாக, தன் சொத்துக்களைப் பொதுவுடைமையாக்கித் துறவு வாழ்க்கையை மேற் கொண்டவர். தன் கொள்கைகளைச் சிறுசிறு நீதிக்கதைகளாக்கி மக்களிடையே தன் கொள்கைகளைப் பரப்பியவர். )

ஒரு மைதானத்தில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அருகில் பாறை ஒன்று இருந்தது.

அதனருகே சென்றவேளையில் முட்டை போன்ற சிறிய உருண்டையைச் சிறுவர்கள் கண்டனர். அந்த உருண்டையைச் சுற்றி நடுவே கோடு ஒன்றும் காணப்பட்டது. சிறுவர்கள் அதை வைத்து ஆராய்ச்சி செய்தனர். அவர்களுக்கு எதுவுமே தெரியவில்லை.

வழியில் சென்று கொண்டிருந்த பிரயாணி ஒருவர் அதைக் கண்டான். அவன் அதை வாங்கிப் பார்த்தான். அது அபூர்வமான பொருளாக அவனுக்குத் தெரிந்தது. அவர்களிடம் அதை வாங்கிக் கொண்டு நகரத்துக்குச் சென்றான். அங்கு அரண்மனைக்குச் சென்று அரசரிடம் காட்டினான். அரசன் அவனுக்குச் சிறு தொகைப் பணத்தைக் கொடுத்துப் உருண்டையைப் பெற்றுக் கொண்டார்.

அரசருக்கோ, அந்த உருண்டையை எப்படியாவது, என்ன பொருள் என்று கண்டு பிடிக்க வேண்டுமென்று தோன்றியது. மந்திரி, அரண்மனைப் பிரமுகர்கள் எல்லோரும் அதனை ஆராய்ந்தனர். அவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. எனவே, நாட்டிலுள்ள ஆராய்ச்சியாளர்கள் வரவழைக்கப் பட்டார்கள். அவர்கள் அந்த உருண்டைப் பொருளை ஆராய்ந்தார்கள். அது முட்டையா, அல்லது உணவுப் பொருளா என்று அறிய, அப் பொருளை வெளியே வைத்தனர்.

கோழி ஒன்று அதைக் கொத்தித் தின்னத் தொடங்கியதும், அது ஏதோ ஒரு தானியத்தின் விதை என்று அறிந்தனர். அதனை விவசாயத்துறை

வல்லுனர்கள் ஆராய்ந்தார்கள். அவர்களுக்கும் புலப்படவில்லை. அவர்களில் ஒருவர் "சிலவேளைகளில் என் தந்தைக்குத் தெரிந்திருக்கலாம். அவரிடம் கேட்டுப் பார்க்கலாம்." என்றார். அவருடைய தந்தையார் ஊன்றுகோலுடன் வந்தார். அந்தத் தானியத்தைப் பார்த்தார். அவருக்குத் தெரியவில்லை.

"என்னுடைய தந்தையாருக்குச் சிலவேளைகளில் தெரியலாம். அவரை அழைத்து வந்து காண்பியுங்கள்" என்றார். அவரை இரண்டு சேவகர்கள் பிடித்துக் கொண்டு வரத் தள்ளாடியபடியே தடியை ஊன்றிக் கொண்டு கிழவர் வந்தார். கண்பார்வை நன்றாக இருந்தது. அவரும் தானியத்தைப் பார்த்து, ".இந்தத் தானியத்தைக் கண்டிருக்கின்றேனே தவிர, இதைப் பற்றி எதுவும் தெரியாது." என்றார்.

பின் "என்னுடைய தந்தை என் கிராமத்தை அ டுத்துள்ள குக்கிராமத்தில் இருக்கிறார். அவரிடம் கேட்டுப் பாருங்கள் என்றார். அவரை அழைத்து வர சேவகர்கள் சிவிகையோடு சென்றார்கள். ஆச்சரியப்படும் வண்ணம் கிழவர் நிமிர்ந்த நடையுடன் வந்தார். அவரை அழைத்துக் கொண்டு அரண்மனைக்கு வந்தார்கள். அவர் தானியத்தின் பெயரைக் கூறினார். பின் "இந்தத் தானியத்தைப் பார்த்து வெகு நாட்களாகி விட்டன." என்றார்.

அரசர் அவரை ஆச்சரியத்துடன் பார்த்தார். பின் அவரிடம் "ஐயா, இது எங்கே பயிர் செய்யப் பட்டது?

நீங்களே இதைப் பயிரிட்டீர்களா? அல்லது யாரிடமாவது வாங்கினீர்களா?" என்று கேள்விக்கு மேல் கேள்வியாகக் கேட்டார். கிழவர் சிரித்தார். பின்பு "இதை நானும் பயிர் செய்திருக்கிறேன். என் காலத்தில் எல்லோருமே இதைப் பயிர் செய்தார்கள். என் காலத்தில் தானியங்களை விலைக்கு விற்பதும் இல்லை. வாங்குவதும் இல்லை. அந்தப் பாவமான செயலை யாரும் செய்யவில்லை." என்றார்.

"இத் தானிய வகையை எங்கே பயிரிட்டீர்கள்?. உங்கள் வயல் எங்கே இருக்கின்றது? என்று விசாரித்தார் அரசர். "அரசே, நான் உழுத நிலமெல்லாம் என் நிலமே. நிலம் எல்லோருக்கும் பொதுவாக இருந்தது. என்னுடையது உன்னுடையது என்று யாரும் உரிமை கொண்டாடியது கிடையாது. எனது என்று சொல்லக் கூடியது என் உழைப்பு மட்டும் தான்." என்றார்.

அரசர், "கிழவரே, உங்களின் மகனும், பேரனும் முதிர்ந்து விட்ட நிலையில், உங்களின் நிமிர்ந்த நடைக்குக் காரணம் என்ன? அதைக் கூறுங்கள்." என்றார். "தங்களின் உழைப்பினால் மனிதர்கள் வாழ்வதை விட்டு விட்டார்கள். பணத்தின் மீது ஆசை. மற்றவர்களின் பொருளில் ஆசை. காசையே அறியாத அந்த நாட்களில், மனிதன் தனக்குத் தானே முதலாளியாக இருந்தான். வேறொரு பொருளில் ஆசை வைப்பதும் இல்லை. களவு செய்வதும் இல்லை. அது தான் காரணம்." என்றார்.

# உ. வே. சாமிநாத அய்யர்

தமிழ்மொழி வரலாற்றில், அழியாப் புகழுடன் விளங்குபவரில் உ.வே.சாமிநாதரும் ஒருவராவர். இவர் 1855ஆம் ஆண்டு, இந்தியாவிலுள்ள, தமிழ் மாநிலத்தில், தஞ்சாவூர் என்னுமிடத்தில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியைத் தன் தந்தையாகிய வேங்கடசுப்பையரிடம் கற்றார். தந்தை சாமிநாதருக்கு, நிகண்டு, நீதிநூல்கள், அந்தாதி போன்ற பாடங்களைக் கற்பித்தார்.

பின்பு மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் தன் கல்வியைத் தொடர்ந்தார். ஆசியரான "தமிழ்க்கடல்" மீனாட்சிசுந்தரம்பிள்ளை, சாமிநாதரிடம் காணப்பட்ட திறமையையும் ஆர்வத்தையும் கண்டார். தனக்குத் தெரிந்ததனைத்தையுமே தம் மாணவருக்குக் கற்பித்தார் என்றே சொல்லலாம். ஆசிரியர் தான் இயற்றும் செய்யுள்களை மாணவரான சாமிநாதரையே ஓலைச்சுவடியில் எழுத வைத்தார்.

மாணவர் மீது கொண்ட பற்றின் காரணமாக, மாணவரின் உண்மைப் பெயரான வேங்கடராமன் என்ற பெயரை மாற்றிச் "சாமிநாதன்" என்று அன்புடன் அழைத்தார். அப்பெயரே நிலையான பெயராகி விட்டது. மீனாட்சிசுந்தரம்பிள்ளை தம்மைக் காண வருபவர்களிடம் எல்லாம் தம் மாணவரின் திறமையை மெச்சிக் கொள்வார். 1876இல் மீனாட்சிசுந்தரம்பிள்ளை மரணமடைந்தார். அதன் பின் சாமிநாதர் திருவாவடுதுறை மடத்தில் தமிழ் ஆசிரியராக இருந்தார்.

1880இல் கும்பகோணம் அரசினர் கல்லூரியில் தமிழாசிரியரானார். அவருடைய தமிழ் அறிவும், புலமையும் வெளியுலகம் அறியத் தொடங்கியது. வெளி இடத்தில் இருந்தும் அவரிடம் பாடம் கற்றுக் கொள்ள அவர் வீட்டுக்கே மாணவர்கள் வந்தார்கள். தமிழின் மீது கொண்ட பற்றுதலால், ஓலைச்சுவடியில் இருப்பவற்றைப் பதிப்பிக்க எண்ணினார். 1887இல் தமிழ்க் காப்பியங்களில் ஒன்றான "சீவகசிந்தாமணி"யை அச்சிட்டு வெளியிட்டார். அதன் பின் தமிழ்நாட்டிலுள்ள பல இடங்களுக்கும் சென்று

ஓலைச்சுவடிகளை ஆராய்ந்து வெளியிட முற்பட்டார். இதற்காகச் சாமிநாதர் பட்ட கஷ்டங்கள் ஏராளம்.

1903ஆம் ஆண்டில் சாமிநாதர் சென்னை அரசாங்கக் கல்லூரிக்கு ஆசிரியராக மாற்றலானார். பதினாறு ஆண்டுகள் வரை கடமையாற்றினார். பின் ஓய்வு பெற்றார். சாமிநாதரிடம் தமிழ் கற்றவர்கள் பலர். பாடத்தைக் கற்பிக்கும் திறனும், பேசும் திறனும், மற்றவர்களிடம் பழகும் திறமையும் இவரை மற்றவர்கள் மதிக்கக் காரணமானது.

1903ஆம் ஆண்டு இவரைக் கௌரவித்து, அரசாங்கத்தினர் ஆயிரம் ரூபாய் சன்மானம் கொடுத்தது. 1906இல் “மகோபாத்தியாய”ப் பட்டம் வழங்கப் பட்டார். 1917இல் பாரத தர்ம மகா மண்டலத்தார் “திராவிட வித்யா பூஷணம்” என்னும் பட்டம் கொடுத்துக் கௌரவித்தனர். காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் “தாட்சணத்திய கலாநிதி” என்னும் பட்டத்தை அளித்தனர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தினர் பொற்கிளி கொடுத்துப் பெருமைப் படுத்தினார்கள். 1932இல் சென்னைப் பல்கலைக் கழகத்தினர் “டாக்டர்-

(கலாநிதி)" பட்டம் கொடுத்துக் கௌரவித்தார்கள்.

அரசாங்கக் கல்லூரியில் இருந்து ஓய்வு பெற்ற பின் சிதம்பரம் மீனாட்சி தமிழ்க் கல்லூரியின் தலைவராகக் கடமையாற்றினார். இவர் தமிழுக்குச் செய்த மிகப் பெரிய தொண்டு தமிழில் உள்ள ஓலைச் சுவடிகளில் இருந்த பழைய நூல்களைப் பதிப்பித்ததாகும். இல்லாவிட்டால் இன்று எமக்குத் பழைய தமிழ் இலக்கிய நூல்கள் கிடைக்காமலே போயிருக்கும். சங்க கால நூல்கள், காவியங்கள், புராணங்கள், பிரபந்தங்கள், இலக்கணங்கள், உரைநடை நூல்கள் போன்றவைகள் இவரால் பதிப்பிக்கப் பட்டவையே.

இவர் 1942இல் காலமானார். இவரை மகாகவி பாரதியாரும், நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையும் புகழ்ந்து போற்றிப் பாடி இருக்கிறார்கள். தமிழ்மொழி உலகிலே மறக்க முடியாத பெருமைக்குரியவர் உ.வே. சாமிநாத அய்யர் என்று சொன்னால் வியப்பதற்கோ, மறுப்பதற்கோ இடமில்லை எனலாம்.

வினாவிடைப் போட்டி முடிவு

1.இங்கிலாந்துப் பிரதமரான வின்ஸ்டன் சேர்ச்சில் இரண்டாம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த இராணுவத் தளபதி மட்டுமல்ல, சிறந்த அரசியல்வாதி. ஆனாலும் இவருக்கு இதற்காகத் தான் நோபல் பரிசு கிடைத்தது.

இல்லை, பல்லக்கு, நம்பிக்கை, பாக்கியம், ஐயம், அம்புலி (இலக்கியம்)

2.இந்தியில் எடுக்கப்பட்ட தமிழ்ப் படமொன்றிற்கு பாகிஸ்தானில் தடை விதிக்கப் பட்டு, வீரியோ காஸெட்டுக்களும் அரசினால் கைப்பற்றப் பட்டது. அந்தப் படம் எது

உரோமர்,ஜாக்கிரதை (ரோஜா)

3.பூவாமல் காய்க்கும் மரம் இது. இதை வைத்துப் பழமொழி கூட இருக்கிறதே!

அமுதம், பத்திரிகை, சந்தி. (அத்தி)

4.யானையை எந்தக்காலில் கட்டுவார்கள்.?.

பிழை, கன்னம், பானம், சங்கு, காப்பு, பால். (பின்னங்கால்)

5.தன் நிறத்தை அடிக்கடி மாற்றும் சக்தி கொண்ட பிராணி இது. சந்தர்ப்ப வாதிகளை இதன் பேரைச் சொல்லி அழைப்பார்கள்.

பவளம், துச்சம், பாற்சோறு, பந்து, தியானம். (பச்சோந்தி)

விடைகளை எழுதியவர்கள்:

☩1.முகுந்தன்மகேந்திரன்- Berg.gladbach
2.ஜெயானந்தன்கண்ணன்-Berg.gladbach
3.கிரிசாந்மனோரஞ்சிதராஜா-Münster
4.ஜெயசாந்மனோரஞ்சிதராஜா-Münster
5.மோகன்இரத்தினசபாபதி-Eschelbronn
6.ஜெயமாலாஇரத்தினசபாபதி-Eschelbronn
7.ஜெயதீபாஇரத்தினசபாபதி-Eschelbronn

☩ இந்த அடையாளம் உள்ளவர் இம்முறைக்கான பரிசைப் பெறுகின்றார். இவருக்கு "வியப்பூட்டும் அறிவியல்" புத்தகம் பரிசாகக் கிடைக்கின்றது.


++++++++++++++++++++++++++++++++++++++++++++

ஒரு ஆண்டிற்குள் ஒரு நல்ல நண்பனைப் பெற்று விட முடியாது. ஆனால் ஒரு மணி நேரத்தில் ஒரு நல்ல நண்பனை இழந்து விட முடியும்.

-சீனப்பழமொழி-

++++++++++++++++++++++++++++++++++++++++++++

# இந்தப் பழம் புளிக்கும்



ஒரு காட்டிலே பல நரிகள் வசித்து வந்தன. அவை கூட்டமாக வசித்தாலும் தனித்தனியாகவே இரை தேடி உண்ணும். மாலையில் ஒன்றாகச் சேர்ந்து உறங்கும். ஒருநாள் கிழநரி ஒன்றுக்கு உணவு எதுவும் கிடைக்கவில்லை. அலைந்து திரிந்து களைத்து விட்டது. அப்பொழுது தற்செயலாக ஒரு முந்திரிகைப் பழத்தோட்டத்தைக் கண்டது.

உடனே சந்தோ'த்துடன் தோட்டத்தின் உள்ளே சென்றது. அங்கே கொத்துக் கொத்தாய் முந்திரிகைப் பழங்கள் மரத்திலே தொங்கின. அதைக் கண்டதும் நரியின் நாக்கில் ஜலம் ஊறியது. எட்டி எட்டிப் பார்த்தது. தொங்கித் தொங்கிப் பார்த்தது. பழங்கள் எட்டவேயில்லை. நரி எவ்வளவு முயன்றும் பழத்தைப் பறிக்க முடியவில்லை.

"சீச்சீ, இந்தப் பழம் புளிக்கும். எனக்கு வேண்டவே வேண்டாம்." என்றபடியே தோட்டத்தை விட்டு வெளியேறியது.

-கிரிசாந் மனோரஞ்சிதராஜா-

# சொற்களைக் கண்டு பிடியுங்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ஞ் | ச | வி | பு | தை | ய | ல் | த | ஞா |
| ஜு | ரு | ன | ல் | ய | க | றை | க | வ | ல |
| ப் | னண | தி | ட் | ல் | ய | தை | பு | ளை | ம் |
| பு | வ | ன | ய் | நா | ட் | டா | மை | ஜு | வ |
| ண் | ப | ரி | பு | ப் | கா | ற் | ஆ | சே | ய் |
| ணி | தி | பு | ன் | னை | ட | ண் | த | ரி | தெ |
| ய | வு | த | ள் | ளி | வி | பா | வ | ல | ன் |
| ம் | ன | ன் | டை | அ | ல | கு | ள | சு | ற் |
| ன | க | த | ட் | டி | ல் | மை | க | ப | ல் |
| ம | டி | நா | ச | ம் | ப | தீ | து | ந் | ப |

முடிவு திகதி: 10.4.98

## சொத்து
(கதைப்பாடல்)





பாடசாலை விட்டுக் கண்ணன்
வீடு வந்தனன்-வீட்டுள்
பலத்த சத்தம் கேட்டுக் கண்ணன்
பதுங்கிக் கொண்டனன்

வீட்டுள் எட்டிப் பார்த்த கண்ணன்
விலகி நின்றனன்
விலகியவன் மீண்டும் மெல்ல எட்டி
விழித்துப் பார்த்தனன்

அப்பா கையில் கத்தியுடன்
கத்திப் பேசுறார்-அவர்
எதிரில் நின்று சித்தப்பாவும்
எகிறிப் பாய்கிறார்

அழுது கொண்டு சித்தி அவர்
அருகில் நிற்கிறார்-அம்மா
அப்பாவோடு சேர்ந்து நின்று
அதட்டிப் பேசுறார்

காதைத் தீட்டிக் கண்ணன் கதையைக்
கேட்கலாயினன்- "தந்தை
தந்த சொத்தில் உரிமையில்லை"
தந்தை உரைக்கிறார்.

"போடா, வெளியே" என்று அப்பா
கத்திச் சொல்கிறார்- சித்தி
கையைப் பற்றிச் சித்தப்பாவும்
தெருவில் இறங்கிறார்..

திகைத்து நின்ற கண்ணன்- சித்தி
கையைப் பற்றினான்-"சித்தி

போக வேண்டாம்" என்று சொல்லிப்
பொருமி அழுதனன்.

சித்தி அவனைக் கட்டிக் கொண்டு
தேம்பி அழுதனள்-பின்
"சின்னாளாய் இருந்திடு நீ
என்று கூறினள்

"பெரிசானால் இப்படித்தான்"
என்றும் கூறினாள்-சண்டை
சொத்துக் கேட்டு விட்டதனால்,
என்றும் கூறினாள்.

பங்கு சொத்தில் கேட்டதாலே
சண்டை வந்ததோ!
பங்கு கேட்காமலே விட்டிருந்தால்
பாசம் வளருமோ!

தம்பியோடு சண்டை போட
வேண்டாம் என்கிறார்-அப்பா
தான் மட்டும் தம்பியோடு
சண்டை போடுறார்!

என்று எண்ணிக் கண்ணனுமே
ஏக்கம் கொண்டனன்- பின்
என்ன செய்வது? என்றெண்ணித்
திகைத்து நின்றனன்!

-புலவர் பூங்கோதை-

## குழந்தைகள் கவனிக்கிறார்கள்:



காரில் பயணம் செய்யும் முதலாளிகள் காரோட்டிக்கும் காது உண்டு என்று எண்ணாமல் மறைமுகமாகக் குடும்பக் கதைகளைப் பேசுவார்கள். அது போல நம் வீட்டில் வளரும் குழந்தைகளுக்கும் காதும் அறிவும் உண்டு என்று எண்ணம் வேண்டும். அக் குழந்தைகள் பெரியவர்களுடைய நடை, உடைகளைக் கூர்மையாகக் கவனிக்கிறார்கள் என்பதை நன்கு மறக்காமல் மனதில் சிந்திக்க வேண்டும்.


தாயைப் போல் மகள்:

பெற்றவர்கள், பெரியவர்களை எதிர்த்து மரியாதைக் குறைவாகப் பேசுவார்களானால் பிள்ளைகளும் மரியாதைக் குறைவாகப் பேசுவார்கள். பொதுவாகத் தாயே பிள்ளைகளை வளர்ப்பதனால், ""தாயைப் போல சேய். நூலைப் போல சேலை"" என்ற பழமொழி ஏற்பட்டது.

ஆதலால் பிள்ளைகளை வளர்க்கும் தாய் தந்தையர் பிள்ளைகளுக்காகவாவது, மிகமிக நேர்மையாகவும், சீலமாகவும் (ஒழுக்கம்) நடந்து கொள்ள வேண்டும். சில பெற்றோர்கள் சிறு குழந்தைகள் என்ற நினைப்பில் அவர்கள் வயதில் மூத்தவர்களை அடிக்கவும், பேசவும், நையாண்டி செய்யவும் அனுமதிக்கிறார்கள். சிறியவர்களின் செயல்கள் இன்பமானது தான். ஆனால் இப்படி வளர்ப்பது பிழையானதாகும். பெரியவர்களுக்கு அடிப்பது, நையாண்டி செய்வது, ஏசுவது கூடாது என்பதை அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அவர்கள் நல்லவர்களாக வளர இது உதவும்.

முகுந்தன் மகேந்திரன்

# பூக்களின் சண்டை



கோயில் நந்தவனம் அது. குளத்தில் தாமரை, நீலோற்பலம், அல்லி போன்ற பூக்களும், கரையில் சம்பங்கி, மல்லிகை, முல்லை, கனகாம்பரம், ரோஜா, மருக்கொழுந்து, சாமந்தி போன்ற பூமரங்களுமாய்க் காட்சி அளித்துக் கொண்டிருந்தன. அருகிலே அம்மன் கோயில் ஒன்றிருந்தது. அதன் அர்ச்சகர் ஒவ்வொரு நாளும் நந்தவனத்தில் பூப்பறித்து, மாலை கட்டுவார். பூக்களால் அம்மனுக்கு அர்ச்சனை செய்வார். வழமைபோலவே, அன்றும் குளத்தில் மூழ்கி விட்டு பூப்பறித்துக் கொண்டு சென்றார்.

அவர் அப்பால் சென்றதும், பூமரங்களுக்கு இருப்புக் கொள்ளவில்லை. தங்களுக்குள் உரையாடின. அப்போது சம்பங்கி, "பூக்களிலேயே யார் சிறப்புக்குரியவர்?" என்ற சர்ச்சையைக் கிளப்பியது. "நான் தான்" என்று பெருமையடித்துக் கொண்டது மருக்கொழுந்து. உடனே, கனகாம்பரம் "நீ ஏன் வீணாகப் பெருமையடிக்கிறாய்! நீ பூவினத்தைச் சேர்த்தவளில்லையே. வாசனை உள்ளவள் தான். என்றாலும் உன்னை "மருக்கொழுந்துப்பூ" என்று யாராவது சொல்கிறார்களா?" என்று சொல்லிச் சிரித்தது.

அப்போது மல்லிகை, மற்றப் பூக்களைப் பார்த்து, "என்னைப்போல கமகம என்ற மணத்துடன் பூக்களைக் கண்டிருப்பீர்களா? நிறத்திலும் மணத்திலும் நானே உயர்ந்தவள்" என்றது. சாமந்திப்பூ அட்டகாசமாகச் சிரித்தது. பின், "என் அழகும், ஒளிரும் என் நிறமும் உங்கள் கண்களுக்குத் தெரியவில்லை. நானே, பூக்களுள் சிறந்தவள்." என்று தம்பட்டம் அடித்தது. அருகில் இருந்த சண்பகப்பூ கர்வத்துடன் சிரித்துக் கொண்டது. "என்ன? சிரிப்பு வேண்டியிருக்கின்றது!" என்பதைப்போல

மற்றப் பூக்கள் எல்லாம் சண்பகப்பூவைப் பார்த்தன.

“என்ன பார்வை! என் நறுமணம் எட்டுத் திக்கும் பரவுமே. அது உங்களுக்குத் தெரியாதா? புலவர்கள் என் வாசனை வானுலகத்துக்கும் செல்லும் என்று பாடல்களில் பாடியிருப்பது அறியவில்லையா?” என்று சண்பகப்பூ சொல்லி முடிக்கவில்லை, குளத்துக்குள் இருந்து சத்தம் எழுந்தது. பூக்கள் எல்லாம் குளத்துக்குள் எட்டிப் பார்த்தன. வெண்தாமரைப்பூ தலையை நீட்டிக் கொண்டது. “சேற்றுக்குள் வளர்வதால், நானோ, செந்தாமரைப்பூவோ குறைந்தவர்கள் இல்லை. என்னில் கலைமகளும், செந்தாமரையில் திருமகளும் உறைவது உங்களுக்குத் தெரியவில்லையா? என்றது. மாலையாகிக் கூடச் சண்டை நிற்பதாக இல்லை.

எல்லாப் பூக்களும் ஒன்றையொன்று பிடித்துத் தின்னாத குறையாகச் சண்டை போட்டுக் கொண்டன. இரவு வந்தும் சண்டை நீடித்தது. பின் ஒருவாறு அடங்கி விட்டது. பொழுது புலர்ந்தது. அர்ச்சகர் வந்தார். கையில் வாடிப்போன மாலைகளும் அர்ச்சித்த பூக்களும் காணப்பட்டன. அவற்றைக் குளத்துள் போட்டார்.

கடவுளுக்குச் சாத்தும் மாலைகள் நிலத்தில் போடக்கூடாது என்பது வழக்கம். வழமைபோல நீராடி விட்டுத் தன் கடமைகளை முடித்து விட்டு, அர்ச்சகர் புறப்பட்டுச் சென்றார்.

திரும்பவும் பூக்களுக்கிடையில் சலசலப்பு உண்டாயிற்று. "நீங்கள் பேசாமல் இருக்கப் போவதில்லையா?" என்று ஆவேசமான குரல் கேட்டுப் பூக்கள் திகைப்புடன் பேச்சை நிறுத்திவிட்டுக் குரல் வந்த திசையை நோக்கின. அருகில் படர்ந்திருந்த அறுகம்புல் அவைகளைப் பார்த்தது. "பூக்களே, ஏன் வீண் சண்டை. இறைவனின் படைப்பில் எல்லோரும் சமம். நான் வெறும்புல் தான். பிள்ளையாருக்கு உகந்தவன். அதற்காகச் சண்டைக்கு வரவில்லை. நேற்றைக்கு இறுமாப்புடன் சென்ற பூக்கள் வாடிக் கருகிக் குளத்தில் மிதப்பதைக் காணவில்லை நீங்கள். நாளைக்கு உங்கள் கதியும் இப்படித்தான். இதை உணராமல் நான் பெரிது, நீ பெரிது என்கிறீர்களே!" என்றது.

பூக்களுக்கு அறுகம்புல் கூறியதன் உண்மை விளங்கியது. அறுகம்புல்லிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டன. அன்று முதல் பூக்களுக்கிடையே சண்டையே ஏற்படவில்லை.

Nektar für die Kinder

Nectar pour les enfants

Nectar for the childrens



உண்ண உணவின்றி,
உடுக்க உடையின்றி,
கல்வி அறிவின்றி,
யுத்தம், கலவரங்களால்,
இன்னலுறும் இளம்சிறார்களுக்கு
இச்சஞ்சிகையைக்
காணிக்கையாக்குகின்றோம்.

புனிதமலர் ராஜேஸ்வரன்

"Siruvar Amutham"
Alefstr- 11
50189 Elsdorf
GERMANY
02271 / 66527